ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk


# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

**திகதி** 27.03.2017

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2016 திசெம்பர்

### பொதுநோக்கு

2016 திசெம்பரில் இலங்கையின் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் கலப்பானதாக காணப்பட்டது. இறக்குமதி செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பின் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்து 2016 திசெம்பர் மாதத்தில் ஏற்றுமதி வருவாய்களில் காணப்பட்ட வளர்ச்சியை மிகக்கூடுதலாக எதிரீடு செய்தது. சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவலுப்பல்களிலிருந்தான வருவாய்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், இம்மாத காலப்பகுதியில் ஆரோக்கியமான வீதமொன்றில் சாதகமான விதத்தில் வளர்ச்சியடைந்தன. அரச பிணையங்கள் சந்தை திசெம்பரில் தேறிய வெளிப்பாய்ச்சல் ஒன்றை காட்டிய வேளையில் கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கு சில உட்பாய்ச்சல்கள் ஏற்பட்டமையையும் அவதானிக்க முடிந்தது.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

2016 திசெம்பரில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 859 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.7 சதவீதமான வளர்ச்சியைப் பதிவுசெய்து ஏற்றுமதிகளின் அனைத்து முக்கிய வகைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தன. கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் உலகளாவிய பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றங்களிலிருந்து கிடைத்த நன்மைகளையும் முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடனான வர்த்தக உறவுகள் மேம்பட்டமையினையும் காட்டுவதாக இருந்தது. இவை திசெம்பரில் ஏற்றுமதிகள் விரிவடைய வழிவகுத்தன.

ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்கான பெருமளவு பங்களிப்பிற்கு கைத்தொழில் ஏற்றுமதிகள் காரணமாக இருந்ததுடன் அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு இதற்கு ஆதரவாக அமைந்தது. இதன்படி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 76 சதவீதத்திற்கு வகைகூறும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு

அடிப்படையில் 2016 திசெம்பரில் ஐ.அ.டொலர் 655 மில்லியனுக்கு 4.4 சதவீதத்தினால் அதிகரித்தன. அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2015இல் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் இரண்டு மடங்கிற்கு கூடுதலாக அதிகரித்தமைக்கு நாணயத்தாள்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். 2016 ஓகத்திலிருந்து அவதானிக்கப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சிப் போக்கின் தொடர்ச்சியாக இறப்பர் உற்பத்தியில் இருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 6.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அறுவை சிகிச்சை மற்றும் ஏனைய நோக்களுக்கான கையுறைகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சியே முக்கிய காரணமாகும். எனினும் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 43 சதவீதத்திற்கு வகைகூறும் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 0.3 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு கனடா, சீனா, அவுத்திரேலியா மற்றும் ஐக்கிய அமெரிக்க எமிரேட்ஸ் அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியச்சந்தை போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சி காணப்பட்ட போதும் ஐக்கிய அமெரிக்க சந்தைகளில் இருந்தான குறைந்த கேள்வியே காரணமாகும். உணவு குடிபானங்கள் மற்றும் புகையிலை தவிர்ந்த அனைத்து கைதொழில வகை ஏற்றமதிகளிலிருந்தான வருவாய்கள் இம்மாதகாலப்பகுதியில் அதிகரித்தன.

மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 23 சதவீதத்திற்கு வகைகூறும் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2016 திசெம்பரில் ஐ.அ.டொலர் 201 மில்லியனுக்கு 5.1 சதவீதத்தினால் வளர்ச்சி அடைந்தமைக்கு வாசனைத்திரவியங்கள், தெங்கு, தேயிலை ஏற்றுமதிகள் வழிவகுத்தன. வாசனைத்திரவியங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 31.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து அனைத்துவகை வாசனைத்திரவியங்களிலும் குறிப்பாக மிளகு, மற்றும் சாதிக்காய் என்பனவற்றில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பிரதிபலித்தது. உள்ளீட்டு மற்றும் உள்ளீடு அல்லாத தெங்கு உற்பத்திகளின் வலுவான செயலாற்றம் தெங்கு ஏற்றமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 20.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைய வழிவகுத்தது. 2016 திசெம்பரில் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஏற்றுமதிகளின் அளவு வீழ்ச்சியடைந்த போதும் சராசரி ஏற்றுமதி விலைகள் உயர்வடைந்தமையே காரணமாகும். மேலும், 2016 யூலையில் இருந்து ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் இருந்தான கடலுணவு இறக்குமதிகள் மீதான தடையை நீக்கியதன் பின்னர் கடலுணவு ஏற்றுமதிகளிலிந்தான வருவாய்கள் தொடர்ச்சியாக அதன் வரவேற்கத்தக்களவு வளர்ச்சி உத்வேகத்தைக் காட்டின.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2016 ஆண்டுப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 10,310 மில்லியன்களாக அமைந்து 2.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்த போதும், 2016இன் பிற்பகுதியில் நேர்க்கணியமான வளர்ச்சி ஒன்று பதிவுசெய்யப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு தளத்தின் தாக்கம் காரணமாக போக்குவரத்து கருவிகளில் இருந்தான வீழ்ச்சி இதற்கு பெருமளவிற்கு பங்களித்திருந்த வேளையில், பெற்றோலிய உற்பத்திகள், தேயிலை மற்றும் வாசனைத் திரவியங்கள் எதிர்மறையான வீதத்தில் பங்களித்தன. பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட குறைந்த பண்ட விலைகள் ஏற்றுமதி சார்ந்த வேளாண்மை உற்பத்திகளின் உள்நாட்டு வெளியீடுகள் குறைவடைந்தமை என்பன ஏற்றுமதிகளில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தன. எனினும், புடவைகள் மற்றும் ஆடைகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி மற்றும் பொறிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2015 உடன் ஒப்பிடுகையில் 2016 இல் அதிகரித்தன.

2016ஆம் ஆண்டுப் பகுதியில் இலங்கையின் வணிக ஏற்றமதிகளின் முன்னனி சந்தைகளான ஐக்கிய அமெரிக்க ஐக்கிய இராச்சியம், இந்தியா, சேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 52 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)**

| வகை | திசெம்பர் 2015 (ஆ) (ஐ.அ.டொ. மில்) | திசெம்பர் 2016 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-திசெ 2015 (ஆ) (ஐ.அ.டொ. மில்) | சன-திசெ 2016 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **627.1** | **654.9** | **4.4** | **8,017.1** | **7,940.1** | **(1.0)** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 393.4 | 393.6 | 0.0 | 4,820.2 | 4,884.1 | 1.3 |
| இதில் ஆடைகள் | 369.2 | 368.1 | (0.3) | 4,555.6 | 4,602.7 | 1.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 58.5 | 62.4 | 6.7 | 761.2 | 767.9 | 0.9 |
| உணவுப் பொருட்கள் குடிபானம் மற்றும் புகையிலை | 27.1 | 23.7 | (12.6) | 306.8 | 323.7 | 5.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 30.3 | 30.8 | 1.7 | 373.9 | 286.9 | (23.3) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 5.5 | 7.7 | 39.3 | 243.7 | 131.5 | (46.0) |
| இரசாயன உற்பத்திகள் | 10.8 | 11.1 | 2.8 | 126.4 | 126.3 | (0.1) |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 9.2 | 12.0 | 30.0 | 112.4 | 116.7 | 3.8 |
| அடிப்படை உலோகம் மற்றும் பொருட்கள் | 4.3 | 6.9 | 61.4 | 55.8 | 89.6 | 60.5 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 4.5 | 12.1 | 168.0 | 45.7 | 42.4 | (7.2) |
| ஏனையவை | 83.5 | 94.7 | 13.4 | 1,171.1 | 1,171.1 | 0.0 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **191.1** | **200.9** | **5.1** | **2,481.5** | **2,326.1** | **(6.3)** |
| தேயிலை | 105.2 | 109.8 | 4.4 | 1,340.5 | 1,269.0 | (5.3) |
| இறப்பர் | 23.7 | 28.5 | 20.4 | 351.7 | 366.0 | 4.0 |
| தேங்காய் | 24.4 | 32.0 | 31.1 | 377.4 | 317.1 | (16.0) |
| வாசனைத் திரவியம் | 15.0 | 17.4 | 16.0 | 163.1 | 169.6 | 4.0 |
| கடலுணவு | 14.4 | 5.7 | (60.6) | 160.4 | 114.1 | (28.9) |
| சிறிய வேளாண்மை உற்பத்திகள் | 3.7 | 2.5 | (31.2) | 31.8 | 31.2 | (2.0) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.4 | 1.7 | (29.8) | 30.5 | 26.5 | (13.0) |
| காய்கறிகள் | 2.3 | 3.2 | 41.6 | 26.1 | 32.7 | 25.0 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **2.2** | **3.2** | **41.9** | **47.9** | **43.5** | **(9.1)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **820.5** | **859.0** | **4.7** | **10,546.5** | **10,309.7** | **(2.2)** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது.

**இறக்குமதிச் செயலாற்றம்**

2016 திசெம்பரில் தொடர்ந்து மூன்று மாதங்களாக இறக்குமதிகளில் இரட்டை இலக்க வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. இதன்படி, இம்மாத காலப்பகுதியில் இறக்குமதி மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 10.4 சதவீதத்தினால் ஐக்கிய அமெரிக்கா டொலர் 1,816 மில்லியன்களுக்கு அதிகரித்தமைக்கு இடைநிலைப்பொருட்கள் இறக்குமதிகளிலும் அதனைத் தொடர்ந்து முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளிலும் ஏற்பட்ட செலவினத்தின் அதிகரிப்பே காரணமாகும். எனினும், 2015 திசெம்பரில் ஆரம்பமான நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினத்தின் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சிப் போக்கு 2016 திசெம்பரிலும் தொடர்ந்தது.

மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 55 சதவீதத்திற்கு வகைகூறும் இடைநிலைப் பொருட்கள் மீதான செலவினம் 2016 திசெம்பரில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 13.3 சதவீதத்தினால் அதிகரித்து, 2014 ஓகத்திற்கு பின்னர் முதல் தடவையாக ஐ.அ.டொலர் 1 பில்லியன் இலக்கினை விஞ்சியது. எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 51.8 சதவீத்தினால் அதிகரித்தமையானது இறக்குமதிகளின் வளர்ச்சிக்கு பெருமளவிற்கு பங்களித்தது. இது சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதிகளில் ஏற்பட்ட 113.8 சதவீத வளர்ச்சியையும் நிலக்கரி இறக்குமதிகளில் ஏற்பட்ட 10.4 சதவீத வளர்ச்சியையும் உள்ளடக்கி இருந்ததுடன் இதற்கு நாட்டில் நிலவிய வரட்சி நிலைமைகளின் விளைவாக உயர்ந்த வெப்பவலு மற்றும் நிலக்கரி வலு உருவாக்கமே காரணமாகும். வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் என்பவற்றின் மீதான இறக்குமதி செலவினமும் 2016 திசெம்பரில் கணிசமாக அதிகரித்தமைக்கு அதிகரித்த தங்க இறக்குமதியே முக்கிய காரணமாகும். மேலும், இரும்பு மற்றும் கலப்பு உலோகம் அல்லாத உருக்கு பித்தளைக் கம்பிகள் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகளை முக்கியமாகக் கொண்ட அடிப்படை உலோகங்கள் சிமெந்து சூளைக்கற்கள் என்பனவற்றை முக்கியமாக கொண்ட இறக்குமதிகளும் இறக்குமதிச் செலவினத்தின் வளர்ச்சிக்கு பங்களித்தன. எனினும் வளமாக்கி, புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், கோதுமை மற்றும் சோளம் மற்றும் உணவு தயாரிப்பு இறக்குமதிகள் மீதான செலவினம் 2015 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2016 திசெம்பரில் வீழ்ச்சியடைந்தன.

மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 25 சதவீதத்திற்கு வகைகூறும் முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினம் 2016 திசெம்பரில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 13.1 சதவீதத்தினால் அதிகரித்தன. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு கட்டவாக்கத் துறையில் ஏற்பட்ட தொடர்ச்சியான விரிவாக்கம் முக்கிய காரணமாகயிருந்தது. 2016 திசெம்பரில் பொறியியல் சாதனங்கள், மின்னியல் பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றும் அலுவலக பொறிகள் என்பனவற்றை முக்கியமாகக் கொண்ட பொறிகள் மற்றும் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.2 சதவீதத்தினால் அதிகரித்தது. கட்டட மூலப்பொருட்கள் மீதான செலவினம் இம்மாத காலப்பகுதியில் 15.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு சிமெந்து, இரும்பு மற்றும் உருக்கு மற்றும் அவை தொடர்பான பொருட்கள் என்பனவற்றின் அதிகரித்த இறக்குமதியே முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், புகைவண்டிப் பாதை நிர்மாணக் கருவிகள், அடிச்சட்டங்கள் என்பன காரணமாக போக்குவரத்து கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தபோதும் முச்சில்லு வண்டிகள் வர்த்தக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் வாடகை ஊர்திகள் போன்ற வீதி ஊர்திகளின் இறக்குமதிகள் கணிசமான அளவு வீழ்ச்சிடைந்தன.

2016 திசெம்பரில் நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 7.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்து உணவு மற்றும் குடிபானங்கள், உணவல்லா நுகர்வுப் வகைகள் ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளை பிரதிபலித்தன. இருப்பினும் கூட, உணவு மற்றும் குடிபான வகைக்குள் சீனி மற்றும் இனிப்பு வகைகள், பாற்பொருட்களின் உற்பத்திகள் மற்றும் குடிபானங்கள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன. உணவல்லா பயன்பாட்டு பொருட்களைப் பொருத்தவரையில் மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள், ஊர்திகள், வீட்டுச் சாதனங்கள், ஆடைகள் மற்றும் துணைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2016 காலப்பகுதியில் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 19,400 மில்லியனாகயமைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.5 சதவீத அதிகரிப்பினை பிரதிபலித்தமைக்கு பொறிகள் மற்றும் கருவிகள் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் மற்றும் தங்கம் என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதியே முக்கிய காரணமாகும். மேலும் கட்டிடப் பொருட்கள், சீனி மற்றும் இனிப்பு மருத்து, மருந்தாக்கல் பொருட்கள் என்பனவும் இறக்குமதி செலவினத்தின் அதிகரிப்பிற்கு குறிப்பிடத்தக்களவிற்கு பங்களித்துள்ளன. எனினும் தனியாள் ஊர்திகள், எரிபொருள் மற்றும் வளமாக்கி என்பனவற்றின் இறக்குமதி மீதான செலவினம் 2015 இல் அவதானிக்கப்பட்ட மட்டத்தில் இருந்து 2016 இல் வீழ்ச்சியடைந்தன.

2016 இல் சீனா, இந்தியா சவூதி அரேபியா, சிங்கப்பூர் மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 57 சதவீத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)

| வகை | திசெம்பர் 2015 (ஐ.அ.டொ. மில்) | திசெம்பர் 2016 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-திசெ 2015 (ஐ.அ.டொ. மில்) | சன-திசெ 2016 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **383.8** | **354.2** | **(7.7)** | **4,713.5** | **4,319.0** | **(8.4)** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 149.5 | 142.6 | (4.6) | 1,627.8 | 1,627.4 | (0.0) |
| மரக்கறிகள் | 48.0 | 40.6 | (15.5) | 396.4 | 373.7 | (5.7) |
| சீனி மற்றும் இனிப்புப் பொருட்கள் | 16.4 | 22.5 | 37.1 | 254.4 | 344.6 | 35.5 |
| பாற் உற்பத்திகள் | 21.3 | 29.6 | 39.0 | 250.9 | 249.3 | (0.6) |
| கடலுணவு | 27.1 | 19.1 | (29.5) | 221.1 | 237.3 | 7.3 |
| குடிபானங்கள | 6.3 | 6.7 | 6.1 | 77.4 | 97.9 | 26.5 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 30.4 | 24.2 | (20.4) | 427.7 | 324.7 | (24.1) |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 234.4 | 211.6 | (9.7) | 3,085.7 | 2,691.5 | (12.8) |
| வாகனங்கள் | 65.7 | 58.3 | (11.2) | 1,359.6 | 794.8 | (41.5) |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 41.2 | 39.2 | (5.0) | 459.8 | 525.8 | 14.3 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவை | 127.5 | 114.2 | (10.4) | 1,266.2 | 1,371.0 | 8.3 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **855.4** | **1,003.6** | **17.3** | **9,638.2** | **9,870.0** | **2.4** |
| எரிபொருள் | 216.2 | 328.2 | 51.8 | 2,699.6 | 2,481.0 | (8.1) |
| இதில் மசகெண்ணெய் | 88.8 | 81.6 | (8.1) | 739.0 | 596.0 | (19.4) |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 102.5 | 219.1 | 113.8 | 1,801.9 | 1,688.4 | (6.3) |
| நிலக்கரி | 24.9 | 27.5 | 10.4 | 158.7 | 196.7 | 23.9 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 241.4 | 227.9 | (5.6) | 2,296.2 | 2,704.9 | 17.8 |
| அடிப்படை உலோகம் | 31.1 | 59.9 | 92.3 | 470.6 | 456.1 | (3.1) |
| கோதுமை மற்றும் சோளம் | 35.0 | 25.6 | (26.6) | 357.2 | 249.2 | (30.2) |
| வளமாக்கி | 28.0 | 7.3 | (74.0) | 289.6 | 136.9 | (52.7) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 14.2 | 73.8 | 421.3 | 161.5 | 514.4 | 218.5 |
| இதில் தங்கம் | 0.6 | 55.3 | 9,428.7 | 42.4 | 374.0 | 782.9 |
| கனிய உற்பத்திகள் | 9.3 | 21.0 | 125.2 | 230.8 | 222.1 | (3.8) |
| இதில் சிமெந்து சூளைக்கற்கள் | 6.8 | 19.0 | 180.1 | 197.3 | 188.9 | (4.3) |
| ஏனையவை | 280.2 | 259.9 | (7.2) | 3,132.7 | 3,105.4 | (0.9) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **404.3** | **457.2** | **13.1** | **4,567.0** | **5,198.0** | **13.8** |
| பொறி மற்றும் கருவிகள் | 223.8 | 251.1 | 12.2 | 2,278.1 | 2,740.7 | 20.3 |
| கட்டப் பொருட்கள் | 128.5 | 148.1 | 15.2 | 1,352.0 | 1,568.7 | 16.0 |
| போக்குவரத்துச் சாதனங்கள | 50.9 | 55.4 | 8.8 | 930.9 | 880.2 | (5.5) |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 1.0 | 2.6 | 148.5 | 5.9 | 8.5 | 42.3 |
| **4. வகைப்படுத்தப்படாதவை** | **1.1** | **1.1** | **(0.2)** | **15.9** | **13.1** | **(17.9)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,644.7** | **1,816.1** | **10.4** | **18,934.6** | **19,400.1** | **2.5** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

**வர்த்தக நிலுவை**

கடந்த இரண்டு மாதங்களில் அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக 2016 திசெம்பரில் வர்த்தக நிலுவையில் பற்றாக்குறை 2015 திசெம்பரின் ஐ.அ.டொலர் 824 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 957 மில்லியனுக்கு அதிகரித்தது. 2016இல் ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 2015இன் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,388 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 9,090 மில்லியனுக்கு அதிகரித்தது.

**வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்**







மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

2016 திசெம்பரில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 224,791 ஆக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 9.1 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இதன்படி 2016இல் இக்காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் 1,798,380 உடன் ஒப்பிடுகையில் 2,050,832 இற்கு 14.0 சதவீதத்தினால் அதிகரித்தன. 2016 ஆண்டுப்பகுதியில் சுற்றுலா வருகைகளின் முதல் ஐந்து முக்கிய மூலங்களாக தொடர்ந்தும் இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்சு என்பன விளங்கின. இவ்வைந்து நாடுகளும் காலப்பகுதியின் மொத்தச் சுற்றுலாப்பயணிகளின் வருகையில் 51.0 சதவீதத்திற்கு வகைகூறின. அதேவேளை சுற்றலாவிலிருந்தான வருவாய்கள் 2016 திசெம்பரில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 385.7 மில்லியனுக்கு 12.9 சதவீதத்தினால் அதிகரித்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய்கள்[1] 2015இன் இதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,980.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,518.5 மில்லியனுக்கு அதிகரித்தன.

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2016ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

2016 திசெம்பர் காலப்பகுதியில் தொழிலாளர் பணவலுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 திசெம்பரின் ஐ.அ.டொலர் 618.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 684.6 மில்லியனுக்கு 10.7 சதவீதத்தினால் மேம்பாடைந்தது. இதன்படி 2016 காலப்பகுதியில் தொழிலாளர் பணவலுப்பல்களிலிருந்தான ஒன்றுசேர்ந்த உட்பாய்ச்சல்கள் 2015 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 6,980.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 7,241.5 மில்லியனாக விளங்கி 3.7 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

2016 திசெம்பரில் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 27.8 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. 2016 காலப்பகுதியில் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் ஒன்றுசேர்ந்த வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 19.1 மில்லியனைக் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலை பதிவு செய்தன. இது, இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 4.9 மில்லியனையும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 14.2 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலையும் உள்ளடக்கியிருந்தது. அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்து மூன்று மாதங்களாக தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. 2016 திசெம்பரில் ஐ.அ.டொலர் 95.9 மில்லியன் வெளிப்பாய்ச்சலைக் காட்டின. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2016 காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகள் 2015 காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 1,093.4 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 324.3 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. 2016 காலப்பகுதியில் பெறப்பட்ட அரசிற்கான நீண்ட காலக் கடன்கள் 2015 காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 469.6 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,287.0 மில்லியன்கொண்ட தேறிய உட்பாய்ச்சலுக்கு அதிகரித்தன.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2016 ஆண்டு காலப்பகுதியில், திரண்ட சென்மதிநிலுவை 2015 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,488.7 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 499.7 மில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்திருப்பதாக மதிப்பிடப்பட்டது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணி வீத அசைவுகளும்**

இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2016 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனுக்கு அதிகரித்ததுடன் இது 3.7 மாத இறக்குமதிக்குச் சமமானதாகப் காணப்பட்ட வேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 8.4 பில்லியனாக விளங்கி 5.2 மாத இறக்குமதிக்குச் சமமானதாகக் காணப்பட்டது.

2016இல் ஐ.அ.டொலருக்கெதிராக 3.8 சதவீதத்தினால் தேய்வடைந்த ரூபா, 2017 மாச்சு 24 அளவில் ஐ.அ.டொலாருக்கெதிராக 1.2 சதவீதத்தினால் மேலும் தேய்வடைந்தது. குறுக்கு நாணய அசைவுகளை பிரதிபலிக்கும் விதத்தில் ரூபா, யூரோவிற்கெதிராக 3.2 சதவீதத்தினாலும், ஸ்டேர்லிங்பவுனுக்கெதிராக

2.8 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னுக்கெதிராக 5.5 சதவீதத்தினாலும் கனேடிய டொலருக்கெதிராக 1.9 சதவீதத்தினாலும் அவுஸ்திரேலிய டொலருக்கெதிராக 6.1 சதவீதத்தினாலும் தேய்வடைந்த வேளையில் இந்திய ரூபாவிற்கெதிராக 4.8 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

## அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | திசெம்பர் 2015 ஐ.அ.டொ. மில் | திசெம்பர் 2016 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - திசெ 2015 ஐ.அ.டொ. மில் | சன - திசெ 2016 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 820.5 (ஆ) | 859.0 | 4.7 | 10,546.5 (ஆ) | 10,309.7 | (2.2) |
| இறக்குமதிகள் | 1,644.7 | 1,816.1 | 10.4 | 18,934.6 | 19,400.1 | 2.5 |
| வர்த்தக மீதி (மிகை (+) குறை (-)) | -824.2(ஆ) | -957.1 | 16.1 | -8,388.1(ஆ) | -9,090.3 | 8.4 |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் (ஆ) | 341.6 | 385.7 | 12.9 | 2,980.7 | 3,518.5 | 18.0 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 618.5 | 684.6 | 10.7 | 6,980.3 | 7,241.5 | 3.7 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | -3.4 | 27.8 | (907.9) | 4.0 | -19.1 | 375.3 |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (ஈ) | 339.8 | 292.5 | (13.9) | 4,705.0 | 4,955.3 | 5.3 |
| இதில், | | | | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 5.8 | 26.1 | 346.4 | 1,210.9 | 1,238.2 | 2.3 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | - | 2,150.0 | 1,500.0 | (30.2) |
| கூட்டுக் கடன்கள் | - | - | - | - | 700.0 | - |
| நீண்ட காலக் கடன்கள் (உ) | 320.5 | 236.5 | (26.2) | 1,267.8 | 1,462.9 | 15.4 |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (ஊ) | - | - | - | 677.6 | 444.5 | (34.4) |

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் கூட்டுக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

(உ) கூட்டுக் கடன்கள் நீங்கலாக

(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்குகிறது.